# செந்தமிழ்

| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு உயயய. புரட். | பகுதி |
| --- | --- | --- |
| சுடு | செப்டம்பர்—1969 | க |


## தொகைகள்

—*—


டாக்டர். ச. வே. சுப்பிரமணியன், M. A., Ph. D.,
தமிழ்த் துறைத் தலைவர்,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.


1. தொக்கு வருவது தொகை என்று கூறுவர். பொரு ளும் உருபும் தொக்கி வருவதைக் குறித்தது தொல்காப்பிய உருபாகிய புற நிலைக்கு முதலிடம் தந்து கூறியது நன்ஓ போன்ற பிற்கால இலக்கணங்கள். அதனால்தான் 'வே மைத் தொகையே வேற்றுமையியல' (தொல். சொல். 413) பொருளும் உருபையும் சேர்த்துக் கூறியது தொல்காப்பி

''இரண்டு முதலா இடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே'

ன் னூல் பேசிற்று. காட்டாக(அ) 'கரும்பு
க 'கரும்பான் இயன்ற வேலி' எனத் வெ
வேற்றுமைத் தொகையாகவும் கரும்புக்
விரியும்போது நான்காம் வேற்றுமை

தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று நடத்துகிறது. இதன் ஒரு பிரிவு பி. ஏ. பட்டப் படிப்புக்கு உரிய வகுப்பாகும். இக் கல்லூரி, மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. 184 மாணவிகளும் 25 மாணவர்களும் இதில் படித்து வருகிறார்கள். தாய்த் தமிழைப் பயிலுவதிலும் பெண்கள்தாம் மும்முரமாக ஈடுபடுகிறார்கள்.

ஆண்டுதோறும் நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வுகள் நடத்துகிறது சங்கம். மதுரையில் மட்டுமன்றி நாகர்கோவில், திருப்பனந்தாள், மோகனூர் முதலான இடங்களிலும் தேர்வு மையம் உண்டு. இந்தத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் பள்ளிக் கூடங்களில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றலாம்.

அஞ்சல் மூலம் படிப்புப் படிப்பது இன்றைய நாகரிகம். இதிலும் தமிழ்ச் சங்கம், முன்னால் நிற்கிறது. அஞ்சல் வழியாகப் பாடம் நடத்திப் புலவர் தேர்வு வரை படிக்க வகை செய்கிறது. படிக்கும் மாணவர்கள் தமிழ் நாட்டில் மட்டும் இல்லை. பெங்களூர் முதல் டில்லி வரை இந்தியா முழுவதும் இருக்கிறார்கள்.

மாணவிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் சரசுவதி பூசையன்று 'கலைமகள் விழா'வில் கலந்துகொள்ளும் வாய்ப்பு உண்டு. அவர்கள் கோலம் போடுகிறார்கள். பூசைக்காக மட்டும் அல்ல; போட்டிக்காவும்தான். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குக் குத்துவிளக்குப் பரிசாகக் கிடைக்கிறது. பேச்சுப் போட்டியும் உண்டு. ஆண்டு மலரும் வெளியிடுகிறார்கள்.

ஏறக்குறைய 8,000 அரிய நூல்கள் கொண்ட வாசகசாலை இருக்கிறது. தமிழ்ச் சங்கமே இதுவரை வெளிவராத அரிய இலக்கிய, இலக்கண நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கிறது. 'செந்தமிழ்'' என்ற பெயரில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சங்கத்தின் இதழ் வெளிவருகிறது.

பழைய ஏட்டுச்சுவடி நூல்கள் பலவற்றை இங்கே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இதைச் சொன்னவுடன் உங்களுக்கு யாருடைய ஞாபகம் வருகிறது? மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சுவாமிநாத ஐயர் அவர்களுடைய நினைவுதானே? அந்த நினைவையும் இங்கே போற்றி வைத்திருக்கிறார்கள். ஆமாம். தமிழுக்குத் தொண்டு செய்த புலவர்கள், பெரியோர்கள் பலரும் எழுதிய கையெழுத்துக் கடிதங்களைப் பத்திரமாக அட்டையில் சட்டமிட்டு வைத்திருக்கிறார்கள். உகைத்

தமிழ் மாநாட்டை ஒட்டிப் பிற நாட்டு அறிஞர்கள் இங்கே வந்திருந்த போது, இந்தக் கையெழுத்துக் கண்காட்சியைக் கண்டு உள்ளம் பூரித்துப் போனார்கள்!

தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வேறு யாராக இருக்க முடியும்? — தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்கள்தாம். கௌரவக் காரியதரிசியாகப் பணியாற்றுபவர் திரு. கி. பழநியப்பன் அவர்கள். திரு பழநியப்பன் ஒரு சிறந்த ஓவியருங்கூட. இன்று புகைப்படங்களில் காணமுடியாத தமிழறிஞர்கள் பலரை ஓவிய வடிவில் எழுதியிருக்கிறார். அவை, முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கோலாலம்பூரில் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. "அப்படங்களில் சில ஆனந்தவிகடன் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிட்ட சிறப்பிதழிலும் வெளியாகியிருந்தன. விகடனின் தமிழ்த் தொண்டு பாராட்டுக்கு உரியது" என்று பெருமையுடன் கூறுகிறார் அவர்.

தமிழில் வித்துவான், புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் வேலை கொடுத்து அலுவலகங்களில் பணிபுரிய வாய்ப்பு அளிக்கலாம். அப்போது ஆட்சியில் நல்ல தமிழ் உலாவ வழி உண்டாகும் எனச் சங்கம் கருதுகிறது. இந்திப் பிரசார சபை இந்தியாவெங்கும் இந்தி மொழியைப் படிக்க எப்படி உதவுகிறதோ, அதைப் போல நாடெங்கும் தமிழ் மொழியைப் பிற மாநிலத்தோரும் கற்க உதவ வேண்டும் என்பது சங்கத்தின் அவா. இதற்கான எளிய பாடப் புத்தகங்களை, ஆசிரியர்களிடம் கொடுத்து அவர்கள் பாடங்கள் போதிக்கும் சிறு பள்ளிக்கூடங்களை இந்தியாவெங்கும் நிறுவ ஆசைப்படுகிறது. இதற்கு மொழி ஒற்றுமையில் ஆர்வ மிகுந்த இந்திய அரசைத் துணைசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறது.

சங்கத்தின் செல்வ நிலையைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்ள ஒன்றும் இல்லை. சுமார் அறுநூறு ரூபாய் வரை வாடகைப் பணத்திலும், மற்றபடி தேர்வுகளில் கிடைக்கும் தொகையிலும்தான் சங்கம் நடந்துவருகிறது. ஒரு நல்ல கட்டடம், ஒரு நூலகம் இவற்றையாவது நிறுவவேண்டிய அவசியம் இருக்கிறது. அன்று முதல் நேற்றுவரை தமிழை வளர்த்த பெருமை மன்னர்களுக்கு உண்டு. இன்று சங்கத்திற்கு நிதி உதவி செய்து தமிழை வளர்க்கும் பெருமையை மக்கள் அடையலாமே? ஏனெனில், பாரதியார் சொன்னபடி 'நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' அல்லவா?

# பரஞ்சோதி முனிவர்

மு. அருணாசலம்
திருச்சிற்றம்பலம்

தமிழ் நாட்டில், சிறப்பாகச் சோழ நாட்டில், சென்ற தலைமுறை வரையில், வீடு தோறும் மிகவும் பிரசித்தமாகப் பாராணம் செய்யப் பட்டு வந்த புராணங்கள் மூன்று. அவை சேக்கிழார் பாடிய திருத் தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம், கச்சியப்ப சிவாசாரியார் பாடிய கந்தபுராணம், பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம் ஆகியவை. இம் மூன்றும் பூசையில் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தன. இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்காக இப்புராணச் சுவடி களில் அன்பர்கள் கயிறு சாத்திப் பார்க்கும் வழக்கத்தையும் மேற் கொண்டு இருந்தார்கள்.

இம் மூன்றினுள் பெரிய புராணம், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையின் வழி நாயன்மார் சரித்திரத்தைப் பக்திச் சுவை ததும்ப விரிவாய்க் கூறுவது. கந்தபுராணமானது முருகப் பெரு மானுடைய வீரச் செயல்களைக் காவியச் சுவை பொருந்தவும், சமய உண்மைகள் விளங்கவும் விரித்துக் கூறுவது. மூன்றாவதாகிய திருவிளை யாடற் புராணம், மதுரை சோமசுந்தரக் கடவுளுடைய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் இலக்கியச் சுவை ததும்புமாறும் சமய உண்மைகள் நிறைந்து விளங்குமாறும் கூறுவது.

சேக்கிழார் காலம் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலமாகிய 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது நன்கு அறிந்த செய்தி. கச்சி யப்ப சிவாசாரியாரின் காலம் இன்னதென்று அறிஞர் ஒரு முகமாகச் சொல்லவில்லை. எட்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் பலர் பலவிதமாய்க் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றுள் உண்மை காண்பது கடினம். எனினும் அக்காலம் பதினைந் தாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று திட்டமாகத் தெரிகிறது.

இப்போது இங்கு முடிவுகாண எடுத்துக்கொண்ட பொருள், பரஞ் சோதி முனிவருடைய காலமாகும். இவருக்குமுன் பெரும்பற்றப்புலியூர்

நம்பி ஒரு திருவிளையாடற்புராணம் பாடியிருக்கிறார். அதைப் பண்டைக் காலத்தோர் நன்கு பயின்றபோதிலும் கூட, இக்காலத்தார் அதை விரும்பிப் பயிலவில்லை. ஆனால் பரஞ்சோதியார் திருவிளையாடலோ, தனது பக்திச் சுவையாலும், இலக்கியச் சுவையாலும், காவிய அமைப்பாலும் சமய உண்மையாலும், மிக விரைவில் சைவ மக்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அதனுடைய தமிழ்ச் சுவையில் ஈடுபடாதவர் யாரும் இல்லை. சுவையைப் பார்க்கும்போது, மிகப் பழைய நூல் என்ற தோற்றம் ஏற்படுகிறது; ஆனால் உண்மையில் அது மிகவும் சமீபத்தில் ஏற்பட்ட நூல் என அறியும் போது, நம்முடைய வியப்பும் நூலின் பெருமையும் இன்னும் அதிகமாகின்றன.

பரஞ்சோதி முனிவருடைய வரலாறு பரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகிறது. இவர் தந்தை மீனாட்சி சுந்தர தேசிகர் என்பவர்; ஊர் வேதாரணியம். இளமையிலே இவர் திருமுறைகளையும், சமய சாத்திரங்களையும், இலக்கண இலக்கியங்களையும் நன்கு பயின்றார். துறவு பூண்டு தலயாத்திரையாக மதுரையை அடைந்தார். அங்குள்ள சைவப் பெருமக்கள் இவருடைய கல்விப் பெருக்கையும் பக்தி விசேடத்தையும், துறவின் பொலிவையும் கண்டு வியந்து, தங்களுக்கு ஆலவாய்ப் பெருமானுடைய புராணத்தைப் புதிதாகச் சமய விளக்கம் ஏற்படும்படி பாடித்தருமாறு வேண்டிக் கொண்டார்கள். அதன்படி இவர் அங்கு நெடுநாள் தங்கித் திருவிளையாடற் புராணம் பாடி அரங்கேற்றினார். அரங்கேற்றியபோது பலபட்டடைச் சொக்காத பிள்ளை இவர் நூலைப் பெரிதும் பாராட்டினார்.

பரஞ்சோதி முனிவர் தம் காலத்து அரசரையோ, வள்ளலையோ, பிற புலவரையோ, பாடியதில்லை. எனினும் இவருடைய காலத்தைத் திட்டமாய் அறிதற்குச் சில குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன.

முதலாவது, சுப்பிரதீபக் கவிராயர் வரலாறு. இவரைத் தமிழ் நாடு நன்கறியும். பெருங்கவிஞராய் வாழ்ந்த போதிலும் மிகவும் வறுமையில் அடிபட்டவர். தம்முடைய தகுதி அறிந்து ஆதரிக்கும் வள்ளல் இல்லாது மிகவும் துன்புற்று நிலக்கோட்டைச் சமீன்தாரரான கூளப்ப நாயக்கன், அரியிலூர் சமீன்தார் குன்னரங்கன் முதலியோரால் இளமையில் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்தார். இந்த சமீன்தாரர்கள் கால கதியால் வலிகுன்றி மறையவே, புலவர் மிகவும் துன்புற்று இருந்தார். அந்த நிலையில் இவர் கண்பார்வையும் மங்கிப் போயிற்று. இவர் தம் புலமை காரணமாக மிகுந்த கர்வம் படைத்தவர். ஆதலால் பிற புல

வர்கள் இவரைக் கண்டு ஒதுங்கி விட்டனர். பிற வள்ளல்களும் இவரை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை.

அப்போது இவர், தமிழ்நாட்டில் வந்து தங்கி, தமிழ் கற்க வேண்டி சிறந்த புலவரைத் தேடிக்கொண்டிருந்த மேலைநாட்டுப் பாதிரியாரான பெஸ்கி வசப்பட்டார். பெஸ்கி இவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து நன்கு உபசரித்தார். பெஸ்கியின் வரலாற்றில் சுப்ரதீபரை அவர் கிறித்துவ மதத்துக்கு மாற்றிவிட்டார் என்ற செய்திகூடக் காணப்படும். அக்கதை பொய்க் கதை. சுப்பிரதீபர் சிறந்த சிவ பக்தர். இவர் பெஸ்கியின் மீதுள்ள நன்றியுணர்ச்சியால் பல நூல்கள் அவருக்குச் செய்து கொடுத்தார். பெஸ்கிக்காக இவர் செய்த நூல்களில் சதுரகராதி, தொன்னூல் விளக்கம், தேம்பாவணி முதலியன சில. பிற்காலத்தில் இந்நூல்கள் பெஸ்கி பெயராலேயே வழங்கலாயின. இது தமிழ் இலக்கிய உலகம் நன்கறிந்த செய்தி.

இளமையில் இவர் நிலக்கோட்டையில் ஆட்சிபுரிந்திருந்த நாகம கூளப்பநாயக்கன் என்ற சமீன்தாரரால் பெரிதும் அபிமானிக்கப்பெற்று வாழ்ந்திருந்தார். இக்கூளப்பன் மதுரை திருமலை நாயக்கனுக்கு மைத்துனனுகை வாழ்ந்தவன். 1659-இல் திருமலை இறந்தபோது இவன் இளம் பிள்ளை. பின்னர் இவன் தன் தகப்பன் இறந்தபின் சமீன்தாரராகி 1730 வரையில் நிலக்கோட்டையில் ஆண்டுவந்தான். இவன் காலம் 1650-1730. (யாம் பதிப்பித்த கூளப்ப நாயக்கன் காதல், 1943 முகவுரை காண்க.) கவிராயர் கூளப்ப நாயக்கன் மீது, காதல், விறலிவிடுதூது என்ற பிரபந்தங்கள் பாடியிருக்கிறுர். பாடிய காலம் சுமார் 1675 ஆகலாம். இக்காதலுள் இவர் தமது குருவாகிய பரஞ்சோதி முனிவரைப் பின் வருமாறு பாராட்டுகிறுர்.

''கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்''

இங்கு இவர் குறிப்பிடுகிற கூடற்பரஞ்சோதி மாமுனிவர் திருவிளையாடல் பாடிய நமது பரஞ்சோதி முனிவரே ஆவார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பரஞ்சோதி என்ற பெயருடையோர் இருவர். ஒருவர் புராணத் திருமலைநாதர் புதல்வராய் 16ஆம் நூற்றுண்டில் தோன்றிச் சிதம்பரப் பாட்டியல் என்ற இலக்கணம் செய்தவர். இவருக்கு முனிவர் என்ற பெயரில்லை. முனிவர் என்ற பெயர் உடையவர் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் ஒருவரே.

இவரே கவிராயருக்குக் குரு ஆவார். இந்தப்பாடல் வரிகளால் முனிவருடைய பெருமையும், கவிராயருடைய பணிவும் நன்குவிளங்குகின்றன. ஆகவே முனிவருடைய காலம் 1675 (அதாவது 1650-1700 ஆசிரிய பதவிக்காலம்) என்று கருதலாம். முனிவர் நீண்ட ஆயுளோடு வாழ்ந்தார் என்பது வரலாறு.

இரண்டாவது, திருஞான சாகரம் (ஞானசாகர வெண்பா) என்ற 100 வெண்பாக்கொண்ட சிறு சைவ சாத்திர நூல், பரஞ்சோதி முனிவரை முதலிலும் கடைசியிலும் வாழ்த்துகிறது. பல இடங்களில் பரஞ்சோதி முனிவருடைய வாக்கையும் எடுத்து ஆளுகிறது.

"ஆதியாய் அந்தமாய் அப்பாலைக் கப்பாலாம்
சோதியாய் ஞானச் சுடராகிக்—கோதிலருட்
பண்பிலெனை யாண்ட பரஞ்சோதி மாமுனிபொற்
றண்பதுமத் தாளே சரண்" 1

"பந்தமறுத் தாண்ட பரஞ்சோதி மாமுனிவன்
தந்தபர மானந்த சாகரத்தில்—அந்தமறச்
சந்ததமும் இன்பசுகந் தானய் இருந்ததனை
எந்தநெறி சொல்வே னியான்." 100

இங்குப் புகழப்பெறுகின்ற பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரேயாவார். திருஞான சாகரத்தின் காலம், நூற்பொருளை நுணுகி ஆராயும்போது 18ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டது என்றும் கருதலாம். ஆகவே இந்நூலாசிரியரின் குருவாகிய பரஞ்சோதி முனிவரின் காலம் இதற்கு முற்பட்டது என்பது தெளிவு. இதனல் முதலாவது கூறிய கால எல்லை ஓரளவு உறுதியாகின்றது.

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல உள்ளமதியின்
பேதங் களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல என்றுபெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடன்மறுகிற்
பாதங்கள் நோவ வளையிந்த ருதி பகர்வாரை யாயுமவரே"

என்ற பரஞ்சோதி முனிவர் பாடலைத் திருஞானசாகர ஆசிரியர் "பூதங்க ளல்லை பொறியல்லை யக்கரண—பேதங்களல்லையெனப் பின்பகன்ற போது" என்ற வரிகளில் எடுத்தமைத் திருப்பதைக் காணலாம்.

மூன்றுவதாக, சிவப்பிரகாசச் சிந்தனை உரை செய்த நல்லசிவதேவர் என்பவர், உரையின் தொடக்கத்தில் அவையடக்கமாகத்தாம்

"தெரிந்தவாறு ஒரு பிரகாரம் வியாக்கி செய்ய ஒருப்பட்டது, 'நாயகன் கவிக்கும் குற்றம் கூறிய கழக மாந்தர்' போலன்றிக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுதார் ஆதலினுல்" என்று எழுதுகிருர். 'நாயகன் கவிக்கும் குற்றம் நாட்டிய கழகமாந்தர்' என்ற தொடர் திருவிளையாடற் புராணத்தில் உள்ள அவையடக்கப்பாட்டு:

"நாயகன் கவிக்கும் குற்றம் நாட்டிய கழகமாந்தர்
மேயஅத் தலத்தி னேர்க்கென் வெள்ளறி வுரையிற் குற்றம்
ஆயுமா றரிதன்று—"

என்று கூறியுள்ளமை (பாட்டு 27) காண்க. இதனுல் நல்லசிவ தேவர் பரஞ்சோதி முனிவருக்கு மாணவர் அல்லது பின் வந்தவர் என்று கருதலாம்.

நல்லசிவ தேவர் திருவாவடுதுறை ஆதினத்தில் 1600-25இல் வாழ்ந்த அம்பலவாண தேசிகரையும், பின்னர் வைத்தியநாத நாவலர் காலத்தில் (சு. 1650) வாழ்ந்த சுவாமிநாத தேசிகரையும் "எமது ஆசிரியன்மார்" என்று கூறுகின்ருர். ஆகவே அவர் காலம் 17ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து (அதாவது சுமார் 1615)தொடங்கி 1700வரை இருத்தல் கூடும். இக்காலப் பகுதியில் வாழ்ந்த நல்லசிவ தேவர், அதே நூற்ருண்டின் இடைப் பகுதியில் செய்யப்பெற்று மிக்க பிரசித்திபெற்றிருந்த பரஞ்சோதி திருவிளையாடல் வரியை மேற்கோளாகக் கூறுவது பொருந்தத்தக்கது.

பல பட்டடைச் சொக்க நாதப் பிள்ளை சிறப்புப் பாயிரம் செய்தார் என்று தொடக்கத்தில் குறிப்பிட்டோம். இவர் காலம் சுப்பிரதீபக் கவிராயர் காலம்; இவரையும், கவிராயரையும் குறித்த கதைகள் பல தமிழ் நாட்டில் வழங்குகின்றன. பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, மதுரை மும்மணிக்கோவை, யமக அந்தாதி, தேவையுலா, அழகர் கிள்ளை விடுதூது, நரசிங்க நாயகர் மடல் முதலான பல நூல்கள் இவர் செய்தவை. இவர் செய்த இருபாடல்கள் திருவிளையாடல் சிறப்புப் பாயிரமாக ஏடுகளில் உள்ளன. இவற்றுள் இரண்டாம் பாடல், புராணப் பொருளையும் செய்யுள் தொகையையும் கூறுவது. முதல் பாடல் பின் வருவது:

"வரஞ்சோதி நாண்மழையால் வருமுத்த
நகைபங்கன் வழங்கப் பெற்ருேன்

பரஞ்சோதி மாமுனிவன் பகர்ந்ததிரு
விளையாடற் பாடல் கூடற்
புரஞ்சோதி யாநின்ற புனிதரைப்போற்
றடை யின்றிப் புகுஞ்சோ மாதித்
தரஞ்சோதி தாமுமுனி தமிழ் முனிதென்
முனியெனச்சொல் தகைமைத் தாமே.''

இப்புலவர் 1725 வரை ஆண்ட விசய ரகுநாத சேதுபதியால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் காலம் 1675—1725 ஆதல் கூடும். முனிவருடைய முதுமையில் இவர் இளைஞராயிருந் திருப்பர். இவர் காலக் குறிப்பாலும் பரஞ்சோதியின் காலம் 1650—1700 என்ற கருத்து வலியுறுகின்றது. காலம் என்பது இங்கு ஆசிரியத்தன்மை பெற்றிருந்த காலமே யன்றி ஆயுட்காலம் அன்று.

இங்ஙனமாக, மேலே காட்டிய பல்வேறு குறிப்புக்களாலும் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் காலம் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது தெளிவாகிறது.

இங்குப் பரஞ்சோதி முனிவர் காலம் பற்றி வழங்கும் வேறு சில கருத்துக்களையும் குறிப்பிடுதல் நலம். ஒன்று, இவர் நிரம்ப அழகிய தேசிகருடன் பயின்றவர் என்பது. இது பொருந்தாது; நிரம்ப அழகியார் 16-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதில் வாழ்ந்தவர். பரஞ்சோதி காலம் இதுவாகமுடியாதென்பது தெளிவு.

மற்றொரு கூற்று, அதிவீரராமபாண்டியர் வேண்டுகோளின்படி முனிவர் திருவிளையாடற் புராணம் பாடினார் என்பது. இவ்வரசர் காலமும் 16ஆம் நூற்றாண்டாதலால், இக்கூற்றும் பொருந்தாததே.

மூன்றாவது கருத்து, திருமலை நாயக்கருடைய அவைப் புலவராயிருந்த சரசுவதி பண்டாரம் என்பவர் தலைமையில், பரஞ்சோதி முனிவர் தம் புராணத்தை அரங்கேற்றினார் என்பது. நாயக்கர் காலமானது 1659 இல். நாயக்கர் ஆதரவிலோ, அவர் அவையிலோ அரங்கேற்றினார் என்று சொல்லாமையால், நாயக்கர் காலத்துக்குப்பின் இவர் புராணத்தை அரங்கேற்றியிருக்கக்கூடும். அப்போது சரசுவதி பண்டாரம் தலைமை வகித்திருத்தலும் கூடும். முன்சொன்னவாறு அரங்கேறிய காலம் சுமார் 1675ஆக இருத்தல் பொருந்தக் கூடியதே. மதுரை ஆலயத்தில் அறுகால் பீடத்து அரங்கேற்றினார் என்று நூலின் 31ஆம் பாடல் கூறுகிறது.

பரஞ்சோதி முனிவர் செய்தாரென்று வழங்குகின்ற சில நூல்கள் பற்றியும் சில சொற்கள் பற்றியும் இங்குக் கூறலாம். இவர் செய்ததாக வழங்கும் நூல்கள் மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரை திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, வேதாரணிய புராணம் என்பன. பதிற்றுப்பத்தந்தாதி ஒரு சிறப்பான நூல். 100 பாடல்கள் கொண்ட சுவைபொருந்திய தோத்திரப் பிரபந்தம். ஆனால் இது பரஞ்சோதி முனிவர் செய்தது அன்று என்றும் அனந்த கவிராயர் செய்தது என்று ஏடுகளில் காணப்படுகிறது என்றும் வையாபுரிப்பிள்ளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திருவிளையாடற் கலிவெண்பா என்பது காப்பு வெண்பாவும் 72 கண்ணிகளுடைய கலிவெண்பாவுமுடையது. ஒவ்வொரு திருவிளையாடலையும் சொல்லி போற்றி என்று முடிவது. இதை முனிவர் செய்தார் என்ற வழக்குப் பொருந்துவதாயிருக்கலாம்.

வேதாரணிய புராணம் 18 சருக்கமும் 1183 பாடல்களும் உடையது. இவர் செய்ததாகவே நெடுங்காலமாக வழங்கிவருகிறது. 1898இல் அச்சாயிற்று. வேதாரணியம் பரஞ்சோதி முனிவரின் ஊர் என்ற வரலாற்றுக்கு ஏற்ப, அதனருகே ஒரு பரஞ்சோதிபுரம் உண்டு, அங்கு முனிவர் சிலை உள்ளது. கோயிலில் சுவாமி, பரஞ்சோதி லிங்கம் என்று வழங்கப்பெறுகிறார் என்றும் கூறுவர். இவற்றின் உண்மை மேலும் ஆராய்ச்சிக்குரியது.

---

# வள்ளுவரும் காந்தியடிகளும்

பண்டித அ. முத்துசாமி பிள்ளை
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மரியன்னை உயர் பள்ளி, மதுரை.

## நேரிசை வெண்பா

1 சேர்த்த பொருளனைத்தும் தேசத்திற் கேயுதவிச்
சீர்த்திகொண்டார் காந்தியார் செந்தமிழே—ஓர்த்துணரின்
அன்பிலா ரெல்லாம் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

2 உண்மை யுரைத்தல் உயர்வெனவே காந்தியார்
திண்மையுடன் கூறியதேன் செந்தமிழே—எண்ணுங்காற்
பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

3 நேரில் புகழ்படைத்த நேருவினைக் காந்தியார்
வாரிசாக் கொண்டதேன் வள்ளுவரே—பாரில்
இதனை யிதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

4 அன்றுநவ காளிதனில் ஆர்ந்தகொலை காந்தியார்
சென்றவுடன் நின்றதேன் செந்தமிழே—என்றும்
அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை.

5 வேண்டாத தென்று விருப்புடனே காந்தியார்
தீண்டாமை போக்கியதேன் செந்தமிழே—யாண்டும்
பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

6 எந்தைநிகர் காந்தியார் இப்புவியி லுள்ளமக்கள்
சிந்தையெலாம் நின்றதேன் செந்தமிழே—சந்ததமும்
உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.

## சங்கச் செய்திகள்

# கலைமகள் விழா

நிகழும் தி. வ. ஆண்டு 2000, ஐப்பசித் திங்கள் ௩-ஆம் நாள் (19—10—1969) ஞாயிற்றுக்கிழமை யன்று வழக்கம்போல் கலைமகள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சிறப்பொடு பூசனையும் வழிபாடும் நிகழ்ந்தபின், சங்கத்தலைவர் தமிழவேள் திரு. பி.டி.இராசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். இவ்விழாவை முன்னிட்டுச் செந்தமிழ்க் கல்லூரி மாணவியர்க்கென்று கோலப் போட்டி வைக்கப்பெற்றிருந்தது. மாணவியர் வகுப்பு வாரியாகக் கலந்துகொண்டு, வண்ணவண்ணக் கோலங்களால் சங்கத்தை அழகுபடுத்தினர். போட்டியில் முதற்பரிசு பெற்ற புகுமுக வகுப்பு மாணவியர்க்குக் 'குத்துவிளக்கு' ஒன்று அளிக்கப்பெற்றது. இது தவிர, 'மங்கையர்க்கரசி' என்ற பொருள் பற்றி வைக்கப்பட்ட கட்டுரைப் போட்டியில், புகுமுக வகுப்பு மாணவி செல்வி. இராதாவாசு, இளங்கலை வகுப்பு மாணவி செல்வி. மாரியம்மாள், வித்துவான் 3ஆம் ஆண்டு வகுப்பு மாணவி செல்வி. காந்திமதி, 4ஆம் ஆண்டு மாணவி செல்வி அநுசுயா ஆகியோர் பரிசு பெற்றனர். இவர்களுக்கு நல்ல தமிழ் நூல்கள் பரிசாக அளிக்கப் பெற்றன. இவ்விழாவை முன்னிட்டு இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. திருமதி. பத்மா சீனிவாசன், திருமதி கமலா ஆகியோரோடு, கல்லூரி மாணவியர்களான செல்வியர் விசாலாட்சி, அலமேலு, ஆனந்தலட்சுமி, கமலா ஆகியோரும் சேர்ந்து 'சகலகலாவல்லி மாலை'யை. வீணையின் இன்னிசையோடு இசைத்துப் பாடினர். பின்னர்ச் செல்வி. ரகுமாயி, சில துதிப்பாடல்களைப் பாடினர். தமிழவேள் அவர்கள் பரிசுகள் வழங்கி, வாழ்த்துரை கூறிய பின் சங்கச் செயலர் அறநெறி அண்ணல் திரு. கி பழநியப்பனார் அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

### கட்டிடக் கால்கோள் விழா

தி. வ. ஆண்டு 2000, கார்த்திகைத் திங்கள் ௩௰ஆம் நாள் (15—12—1969) திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில், இத் தமிழ்ச் சங்கத்தின் மேல்மாடியில், ஒரு கூடம் அமைப்பதற்கான கட்டிடக் கால் கோள் விழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. சங்கத் துணைத்தலைவர்

திரு. பி. அரங்கசாமி நாயுடு, சங்கச்செயலர் திரு. கி. பழநியப்பனுர், கல்லூரித் துணைத் தாளாளர் திரு. சி. சுந்தரவரதன் ஆகியோர் இவ்விழாவை முன்னின்று நடத்தினர். கல்லூரி ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும், சங்க அலுவலர்களும் கலந்துகொண்டனர். சங்கச் செயலர் திரு. கி. பழநியப்பனுரவர்கள் நன்றியுடன் விழா இனிது முடிந்தது.

## சங்கப் புலவர் தேர்வு — கால அட்டவணை

சங்கப் புலவர் தேர்வுகள், கீழ்க்கண்ட அட்டவணைப்படி இத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 16—3—1970 | திங்கட்கிழமை | 10 மணி முதல் 1 மணி வரை | இலக்கியம் 1 |
| 17—3—1970 | செவ்வாய்க்கிழமை | ,, | இலக்கியம் 2 |
| 18—3—1970 | புதன்கிழமை | ,, | கல்வெட்டு |
| 19—3—1970 | வியாழக்கிழமை | ,, | மொழி இலக்கிய வரலாறு |
| 20—3—1970 | வெள்ளிக்கிழமை | ,, | இலக்கணம் 1 |
| 21—3—1970 | சனிக்கிழமை | ,, | இலக்கணம் 2 |

**குறிப்பு :—** நுழைவு, இளம்புலவர் தேர்வுக்குரிய கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

கி. பழநியப்பன்,
செயலர்.